TNVR0A0001732024

Presented on : 15-10-2024
Registered on : 06-02-2025
Decided on : 29-01-2026
Duration : 1 years, 3 months, 14 days

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், விருதுநகர்.

முன்னிலை:- திருமதி. P.S.A. நிஷாந்தினி , B.C.A., B.L.(Hons)

மாவட்ட உரிமையியல் நீதிபதி, விருதுநகர்

2026 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 29 ம் நாள் வியாழக்கிழமை

**அசல் வழக்கு எண். 26/2025**

1. அசோக்
2. தனலட்சுமி - வாதிகள்

/எதிர்/

1. வளர்மதி
2. மீனாராணி
3. கேமாராணி - பிரதிவாதிகள்

இவ்வழக்கு 29.01.2026 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ராஜ்குமார் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளுக்கு சம்மன் சார்பு செய்யப்பட்டு பிரதிவாதிகளை நீதிமன்றம் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பு வாதத்தை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இந்நாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

## தீர்ப்புரை

தபசில் சொத்தில் வாதிகளின் அனுபவத்தை பிரதிவாதியோ, அவரது வகையாட்களோ சட்டவிரோதமாக பணம் கேட்டு எந்தவொரு தொந்தரவோ, இடைஞ்சலோ செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், வாதிகள் பிரதிவாதியிடம் பெற்ற கடன் ரூ.50,000/-க்கு கையெழுத்து செய்து கொடுத்த நிரப்பப்படாத புரோநோட்டை வாதிகளுக்கு திரும்பி ஒப்படைக்க செயலுறுத்துக் கட்டளை பரிகாரமும், வழக்கின் செலவுத் தொகையும் கோரி தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்:-**

2. 1,2 வாதிகள் கணவன் மனைவி என்றும் வாதிகள் 15 பசுமாடுகள் வைத்து சங்கரலிங்கபுரம், கன்னிசேரி புதுார் மற்றும் ஓ.கோவில்பட்டி ஆகிய கிராமப் பகுதிகளில் சில்லறையாக தினசரி காலை மற்றும் மாலை வேளைகளில் பால் விற்பனை செய்தும், முத்துலாபுரம், சாத்துார் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள நிறுவனங்களுக்கும், அதில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் காலை மாலை டீ சப்ளை செய்தும் தங்களது குடும்ப வாழ்வாதாரத்தை உயர்த்தி வருவதாகவும், 2 ம் வாதிக்கு அவரது தந்தை உதவியின்பேரில் சங்கரலிங்கபுரம் கிராமத்தில் 4 1/2 செண்ட் அளவிலான தபசில் 1ம் அயிட்டச் சொத்தை கடந்த 2017 ம் வருடம் கிரையம் பெற்று அனுபவித்து வருவதாகவும், வாதிகளின் இரு மகன்கள் R.R.நகரில் உள்ள ராம்கோ வித்யாலயா என்ற CBSC பள்ளியில் கடந்த 7 ஆண்டுகளாக படித்து வருவதாகவும், வாதிகள் தங்களது தொழிலுக்காக தபசில் 1ம் அயிட்டச் சொத்துக்களை விருதுநகரில்

உள்ள இக்யுடாஸ் வங்கியில் அடகு வைத்து ரூ.5,03,000/-ஐ கடந்த 30.10.2017 ம் தேதியன்று கடனாகப் பெற்று, மேற்படி கடனுக்கு மாதம் ரூ.8900/- வீதம் நாளது தேதி வரை தவணைகளை செலுத்தி வருவதாகவும், வாதிகள் வியாபாரத்தில் கிடைத்த பணத்தை வைத்தும், 2 ம் வாதிக்கு திருமணத்தின்போது அணிவித்த நகைகளை வைத்தும் ஓ,கோவில்பட்டி கிராமத்தில் 2 1/2 செண்ட் வீட்டடி மனை நிலமான தபசில் 2 ம் அயிட்டச் சொத்தை கிரையம் பெற்றுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

3. பிரதிவாதிகள் தேவா பயர் ஒர்க்ஸ் என்ற பெயரில் பட்டாசு தொழிற்சாலை வைத்து, பயர் ஒர்க்ஸ் குத்தகைக்கு விட்டு அனுபவித்து வருவதாகவும், பிரதிவாதிகள் வாதிகளிடம் பால் வாங்கி வந்த வகையில் வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் பழக்கம் ஏற்பட்டதாகவும், வாதிகளும், 1 ம் வாதியின் அக்கா லதாபாண்டியும் சேர்ந்து ஓ.கோவில்பட்டி கிராமத்தில் சுமார் 25 செண்ட் அளவுள்ள தபசில் 3 ம் அயிட்டச் சொத்துக்களை கடந்த 14.12.2021 ம் தேதி கிரையம் பெற்று அனுபவித்து வருவதாகவும், மேற்படி சொத்துக்களை கிரையம் பெற ஏற்பாடு செய்தபோது, வாதிகள் கடந்த 10.12.2021 ம் தேதி 1 ம் பிரதிவாதியிடம் ரூ.50,000/-ஐ கடனாக வாங்கி, மேற்படி கடனுக்கு 1 ம் பிரதிவாதி நிரப்பப்படாத புரோநோட்டில் வாதிகளிடம் கையெழுத்தும் வாங்கிக் கொண்டு, கடன் தொகை ரூ.50,000/-க்கு மாதம் ரூ.5000/- வீதம் வட்டியும் வசூல் செய்து வந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

4. வாதிகள் தங்களது வருமானத்தைக் கொண்டும், நகைகளை அடகு வைத்தும் கடந்த 2022 ம் வருடத்தில் தபசில் 4 ம் அயிட்டச் சொத்துக்களை கிரையம்

பெற்று கடந்த 14.08.2023 ம் தேதி சிவகாசி சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் பைனான்ஸ் கம்பெனியில் ரூ.20 லட்சம் வீட்டுக்கடன் பெற்று 4 வது அயிட்டச் சொத்தில் வீடு கட்டி அதில் குடியிருந்து வருவதாகவும், மேற்படி பைனான்ஸ் நிறுவனத்திற்கு மாதம் ரூ.26,635/- வீதம் நாளது தேதி வரை தவணை செலுத்தி வருவதால், மேற்படி பைனான்ஸ் நிறுவனத்தினர் மேலும் ரூ.3,70,000/- வாதிகளுக்கு டாப் ஆப் லோன் கொடுத்ததாகவும், வாதிகள் 1ம் பிரதிவாதியிடம் பெற்ற கடன் தொகை ரூ.50,000/-ஐ கடந்த 03.01.2023 ம் தேதி பிரதிவாதிகளின் பயர் ஒர்க்ஸ் நிறுவனத்திற்காக வங்கி வரைவோலையாக எடுத்துக் கொடுத்து கடனை திருப்பி செலுத்திவிட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

5. 1ம் பிரதிவாதியின் கணவர் இறந்துவிட்டதால் வாதிகளுடன் உள்ள பழக்கத்தின் அடிப்படையில் 2,3 பிரதிவாதிகளை கல்லூரிக்கு அழைத்துச் செல்ல பஸ் ஸ்டாப்புக்கு வண்டியில் அழைத்துச் செல்வதற்கும், பயர் ஒர்க்ஸ் வேலைக்கு ஆட்கள் அமர்த்துவதும், பயர் ஒர்க்ஸ் சம்மந்தப்பட்ட வேலைகள் செய்யவும், பிரதிவாதிகளின் வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொடுக்கவும், மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்கும் நம்பிக்கையாக வாதிகளை வைத்து பிரதிவாதிகள் வேலை வாங்கி வாதிகளும், பிரதிவாதிகளும் குடும்ப நண்பர்களாக பழகிவந்ததாகவும், பின் வாதிகளுக்கு தொடர்ந்து இருந்த பல வேலைகள் காரணமாக பிரதிவாதிகள் சொல்லும் வேலையை செய்ய இயலவில்லை என்பதால், வாதிகள் ஏற்கனவே பிரதிவாதிகளிடம் பலமுறை வேறு வேலைகளுக்குப் பேசிய ஆடியோ பதிவுகளை வைத்துக்கொண்டு வாதிகள் பல லட்சம் கடன் மற்றும் நகைகள் வாங்கியதாக குற்றம்

சுமத்தி வாதிகளை மிரட்டி வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

6. மேலும் பிரதிவாதிகள் ஏற்கனவே வாதிகளிடம் எழுதி வாங்கிய நிரப்பப்படாத புரோநோட்டை திருப்பித் தராமல் தங்களிடம் வைத்துக்கொண்டு வாதியை மோசடியாக ஏமாற்றி பணம் பறிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் செயல்பட்டு தனது வகையாட்கள் மூலமாகவும், வக்கீல் மூலமாகவும், கடந்த 29.07.2024 ம் தேதி தபசில் 4 ம் அயிட்டச் சொத்திற்கு வந்து பிரதிவாதிகள் கேட்கும் பணத்தை ஒரு மாதத்திற்குள் கொடுக்காவிட்டால் தபசில் சொத்தில் குடியிருக்க விடமாட்டோம் என்று வாதிகளை மிரட்டியதாகவும், மேற்படி சம்பவம் குறித்து வாதிகள் அன்றையதினமே வச்சக்காரப்பட்டி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு மீதான விசாரணையின்போது, பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக உரிய நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்திய போதிலும், பிரதிவாதிகள் மீண்டும் ஆமத்தூர் காவல் நிலையத்தில் கொடுத்த பொய்யான புகார் மீதான 03.10.2024 ம் தேதிய விசாரணையில், பிரதிவாதிகள் 2 ம் வாதி செல்போனில் பேசியதாக ஒரு ஆடியோ பதிவை காண்பித்து அதன் மூலம் கடன் கொடுக்க வேண்டுமென்று ஒப்புக்கொண்டுள்ளதால் தாங்கள் கூறும் பணத்தை தர வாதிகள் கட்டுப்பட்டவர்கள் என்றும் கூறியதாகவும், எவ்வித ஆவணங்களுமின்றி பல லட்சம் கடன் மற்றும் நகைகள் கொடுத்ததாகக் கூறுவது தவறு என்றும் கூறப்பட்டுள்ளது.

7. பிரதிவாதிகள் பயர் ஒர்க்ஸ் உரிமையாளர் என்பதாலும், அவர்கள் ஆள்பலம், அதிகார பலம் உள்ளவர்கள் என்பதாலும் பணத்தை வைத்து வாதிகள் மீது பொய்யான

புகாரை பதிவு செய்ய திட்டமிட்டு, வாதிகள் கொடுத்த நிரப்பப்படாத பிராமிசரி நோட்டை வைத்து பல லட்சம் வரை நிரப்பி வாதிகளின் பெயரில் உள்ள தபசில் சொத்துக்களை அபகரிக்கப் போவதாக மிரட்டி வருவதாகவும், பிரதிவாதிகளுக்கு வாதிகள் கொடுக்க வேண்டிய ரூ.50,000/-ஐ அசலும், வட்டியும் சேர்த்து திருப்பிச் செலுத்திய பின்பும், பிரதிவாதிகள் வாதிகளை தொழில் செய்ய விடாமல் பிரச்சனை செய்து வருவதால் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

8. பிரதிவாதிகளுக்கு சம்மன் சார்பு செய்யப்பட்டு பிரதிவாதிகளை நீதிமன்றம் அழைத்தும் ஆஜராகாததால் கடந்த 16.09.2025 ம் தேதியன்று தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளனர். உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 5(2)ன்படி பிரதிவாதி தோன்றாத்தரப்பினராக இருந்தபோது வாதிகள் அவர்களது கோரிக்கையை நிரூபிக்க வேண்டும் என்று கண்டுள்ளது. அதன் அடிப்படையில் வாதிகள் தங்களது வழக்கை நிரூபித்துள்ளார்களா என்பதையும், வாதிகள் கோரும் பரிகாரங்கள் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா என்பதைப் பற்றியும், தீர்மானிக்க வேண்டியுள்ளது.

**இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் இவ்வழக்கு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும் :-**

9. வாதிகள் தரப்பில் வாதி **வா.சா.1** ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியமோ சான்றவாணங்களோ தாக்கல் செய்யப்படவில்லை.

10 தபசில் சொத்தில் வாதிகளின் அனுபவத்தை பிரதிவாதியோ, அவர்களது வகையாட்களோ சட்டவிரோதமாக பணம் கேட்டு எந்தவொரு தொந்தரவோ, இடைஞ்சலோ செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், வாதிகள் பிரதிவாதியிடம் பெற்ற கடன் ரூ.50,000/-க்கு கையெழுத்து செய்து கொடுத்த நிரப்பப்படாத புரோநோட்டை வாதிகளுக்கு திரும்பி ஒப்படைக்க செயலுறுத்துக் கட்டளை பரிகாரமும் கோரி தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.1 தனது சாட்சியத்தில், வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளையே சாட்சியமளித்துள்ளார். வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் வா.சா.ஆ.1 ஆகவும், வாதி தொழில் செய்து வருவதற்கான சான்றிதழ் அசல் வா.சா.ஆ.2 ஆகவும், வாதிகள் பிரதிவாதிகள் மீது புகார் கொடுத்ததற்கான மனு ரசீது அசல் வா.சா.ஆ.3 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

11. வாதி தொழில் செய்து வருவது வா.சா.ஆ.2 சான்றிதழ் மூலம் தெரியவருகிறது. வாதிகள் கடந்த 10.12.2021 ம் தேதி 1ம் பிரதிவாதியிடம் ரூ.50,000/-ஐ கடனாக வாங்கி, மேற்படி கடனுக்கு 1ம் பிரதிவாதி நிரப்பப்படாத புரோநோட்டில் வாதிகளிடம் கையெழுத்தும் வாங்கிக் கொண்டு, கடன் தொகை ரூ.50,000/-க்கு மாதம் ரூ.5000/- வீதம் வட்டியும் வசூல் செய்து வந்ததாகவும். வாதிகள் 1ம் பிரதிவாதியிடம் பெற்ற கடன் தொகை ரூ.50,000/-ஐ கடந்த 03.01.2023 ம் தேதி பிரதிவாதிகளின் பயர் ஒர்க்ஸ் நிறுவனத்திற்காக வங்கி வரைவோலையாக எடுத்துக் கொடுத்து கடனை திருப்பி செலுத்திவிட்ட நிலையில், 29.07.2024 ம் தேதியன்று பிரதிவாதிகள், தபசில் 4 ம் அயிட்டச் சொத்திற்கு வந்து பணம் கேட்டு தபசில் சொத்தில் வாதிகளின்

அனுபவத்தை இடைஞ்சல் செய்ததால், வாதிகள் கடந்த 29.07.2024ம் தேதி வச்சக்காரப்பட்டி காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்துள்ளது வா.சா.ஆ.3ன் மூலம் தெரியவருகிறது. வாதி வழக்குரையில் கூறியுள்ள விபரங்களை பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி சாட்சிய சான்றாவணங்கள் தாக்கல் செய்து தனது தரப்பினை மெய்ப்பிக்கவில்லை. மேலும் வா.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் வாதிகள், பிரதிவாதிகள் மீது புகார் அளித்துள்ள விபரத்தை மட்டுமே அறிய முடிகிறது. அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து வாதி தனது வழக்குரையில் குறிப்பிட்டு கூறவில்லை. மேலும் வாதிகள் தரப்பில் வழக்குரை 2ம் பரிகாரம் குறித்து வாபஸ் பெற்றுக் கொள்வதாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும். தபசில் சொத்திற்கு பிரதிவாதிகள் வந்து வாதிகளின் அனுபவத்தை இடைஞ்சல் செய்வதாக வாதிகள் குறிப்பிட்டுள்ள நிலையில். மேற்படி விபரத்தை பிரதிவாதிகள் தரப்பில் மெய்ப்பிக்காத நிலையிலும். வாதிகளுக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

12. வாதியின் வழக்கை மறுதலிக்க வேண்டிய நிலையில் உள்ள பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி வாதிகள் 1ம் பிரதிவாதியிடம் கடன் பெற்றனர் என்றோ கடனுக்கு ஆதரவாக நிரப்பப்படாத புரோநோட்டு வாதிகள் எழுதிக் கொடுத்தனர் என்றோ, மேற்படி தொகையை கேட்டு பிரதிவாதிகள் தபசில் சொத்திற்கு வந்து வாதியின் அனுபவத்தை இடைஞ்சல் செய்யவில்லை என்றோ சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்து வாதிகளின்

வழக்கை பொய்ப்பிக்கவில்லை.

13. மேலும் இவ்வழக்கில் செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் பொறுத்து வழக்கை வாபஸ் செய்துகொள்வதாகக் கூறி வாதிகள் தரப்பில் 29.01.2026 ம் தேதி குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், வாதிக்கு வழக்குரையில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக, தபசில் சொத்தில் வாதிகளின் அனுபவத்தை பிரதிவாதியோ, அவரது வகையாட்களோ சட்டவிரோதமாக பணம் கேட்டு எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு வழங்கி வழக்கு பகுதியாக அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தரிடம் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 2026 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 29 ம் நாளாகிய இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P S A NISHANTHINI  Digitally signed by P S A NISHANTHINI

**மாவட்ட உரிமையியல் நீதிபதி ,**

**விருதுநகர்.**

வாதி தரப்பு சாட்சி :

வா.சா.1 அசோக்

வாதி தரப்பு சான்றாவணங்கள் :

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | வா.சா.1 ன் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) |
| வா.சா.ஆ.2 | MSME CERTIFICATE கணினி நகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.3 | 29.07.2024 | 2ம் வாதி பிரதிவாதிகள் மீது கொடுத்த புகார் மனுவிற்கான ரசீது அசல் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:

-இல்லை-

P S A NISHANTHINI Digitally signed by P S A NISHANTHINI

**மாவட்ட உரிமையியல் நீதிபதி ,**

**விருதுநகர்.**

**மா.உ.நீதிமன்றம், விருதுநகர்**

**அசல் வழக்கு எண். 26/2025**

**தீர்ப்புரை**

**நாள்: 29.01.2026**